2023 மார்ச் 28]

பெறுவதற்கு மிகவும் சிரமப்படுகின்றார்கள். இதனைக் கருத்தில் கொண்டு, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் தங்கள் துறையின் வாயிலாக அங்கு ஒரு கூட்டுறவு வங்கியினை ஏற்படுத்தித் தருவாரா என்பதனை தங்கள் வாயிலாக அறிய விரும்புகின்றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. கேஆர். பெரியகருப்பன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் திரு. எபினேசர் அவர்கள் இங்கே ஒரு கோரிக்கையை வைத்திருக்கிறார்கள். அந்தக் கோரிக்கையில் நியாயம் இருப்பதை ஏற்கெனவே அவர் நிகழ்ச்சி ஒன்றில் என்னிடத்திலே சொல்லியிருந்தார். நானும், துறை சார்பில் அங்கு ஒரு வங்கியை அமைப்பதற்கு வாய்ப்புகள் இருக்கிறதா என்று ஆய்வு செய்யச் சொன்னேன். அவர்களும் நல்ல சாதகமான பதிலைத் தந்திருக்கிறார்கள். ஆகவே, இந்த வங்கிச் சேவை இல்லாத பகுதியில் கூட்டுறவுச் சங்கங்களின் மூலமாக மக்களுக்குக் கடன் வழங்குவதற்காக அவர் எடுத்திருக்கின்ற அந்த முயற்சிக்கு நிச்சயமாக வெற்றி கிடைக்கும். குறிப்பாக, இந்த ஆண்டு அந்த வங்கி துவங்குவதற்கான அனைத்துப் பணிகளும் மேற்கொள்ளப்படும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா வரிசை எண் 56, மாண்புமிகு உறுப்பினர் திரு. சு. ரவி, மாண்புமிகு சமூக நலன்–மகளிர் உரிமைத் துறை அமைச்சர் அவர்கள்.

56—

அங்கன்வாடி மையக் கட்டடம்

***1808—திரு. சு. ரவி:**

மாண்புமிகு சமூக நலன்–மகளிர் உரிமைத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) அரக்கோணம் தொகுதி, அரக்கோணம் ஊராட்சி ஒன்றியம், இச்சிபுத்தூர் ஊராட்சி, இச்சிபுத்தூர் ஆதி திராவிடர் குடியிருப்புப் பகுதியில் புதிய அங்கன்வாடி மையக் கட்டடம் கட்ட அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

[*2023 மார்ச் 28*

மாண்புமிகு திருமதி பி. கீதா ஜீவன், சமூக நலன்—மகளிர் உரிமைத் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தங்களின் அனுமதியோடு திருத்திய விடையை இப்பேரவைக்கு அளிக்கிறேன்.*

(அ) மற்றும் (ஆ) ராணிப்பேட்டை மாவட்டம், அரக்கோணம் ஊராட்சி ஒன்றியம், இச்சிபுத்தூர் ஊராட்சியில், இச்சிபுத்தூர் பள்ளி வளாக மையம் மற்றும் இச்சிபுத்தூர் ஆதி திராவிடர் குடியிருப்பு மையம் என இரண்டு மையங்கள் செயல்பட்டு வருகின்றன. இச்சிபுத்தூர் பள்ளி வளாகத்தில் செயல்பட்டுவரும் மையத்திற்கு 2013–2014 ஆம் ஆண்டில் மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதித் திட்டத்தின்கீழ் சொந்தக் கட்டடம் கட்டப்பட்டு செயல்பட்டு வருகிறது. இச்சிபுத்தூர் ஆதி திராவிடர் குடியிருப்புப் பகுதியிலுள்ள குழந்தைகள் மையம் தனியார் வாடகைக் கட்டடத்தில் தற்போது செயல்பட்டு வருகிறது. இம்மையத்திற்கான சொந்தக் கட்டடத்தை 2022–2023 ஆம் ஆண்டுக்கான மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதித் திட்டத்தின்கீழ் 11 இலட்சத்து 97 ஆயிரம் ரூபாய் மதிப்பீட்டில் கட்டுவதற்கு மாவட்ட ஆட்சியர் அவர்களால் நிர்வாக அனுமதி வழங்கப்பட்டு, கட்டுமானப் பணிகள் துவங்கப்படவுள்ளன. அப்பணியானது துரிதமாக மேற்கொள்ளப்பட்டு விரைவில் கட்டி முடிக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

முற்பகல் 10–45

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. சு. ரவி அவர்கள்.*

திரு. சு. ரவி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழகத்தினுடைய எதிர்க்கட்சித் தலைவர், கழகப் பொதுச் செயலாளர் அண்ணன் எடப்பாடியார் அவர்களை வணங்குகிறேன். எனது அரக்கோணம் தொகுதியிலுள்ள ஆதி திராவிடர் காலனியில் வாடகைக் கட்டடத்தில் இயங்கிய அங்கன்வாடி மையத்திற்கு ஒரு புதிய கட்டடம் கட்டித் தர வேண்டுமென்று கேட்டேன். மாண்புமிகு அமைச்சர் அவர்கள் மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதித் திட்டத்தின்கீழ் கட்டித் தருவதாக உறுதி அளித்திருக்கிறார்கள். அந்தக் கட்டடம் எந்த கால அளவிற்குள் கட்டித் தரப்படும் என்பதை அறிய விரும்புகிறேன்.

2023 மார்ச் 28]

அதேபோல, குழந்தைகள் வளர்ச்சித் திட்டம் சிறப்பாக நடைபெற வேண்டுமென்றால், தமிழகத்திலே இருக்கக்கூடிய காலிப் பணியிடங்கள் நிரப்பப்பட வேண்டும். அங்கன்வாடிப் பணியாளர்கள், அங்கன்வாடி உதவியாளர்கள் என சுமார் 40 சதவிகித காலிப் பணியிடங்கள் இருக்கின்றன. அவற்றை நிரப்ப இந்த அரசு முன்வருமா என்பதைத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு சமூக நலன்–மகளிர் உரிமைத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திருமதி பி. கீதா ஜீவன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, விரைவிலே கட்டிக் கொடுக்க நடவடிக்கை எடுக்கப்படும் என்று கூறியதைப்போல, நிச்சயமாக, அந்தக் கட்டடம் கட்டி முடிக்கப்படும். அதேபோல, காலிப் பணியிடங்கள் பற்றி மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் இங்கே கூறினார்கள். அரசு அதைக் கவனத்தில் எடுத்துக்கொள்ளும். இந்தத் துறையினுடைய பணிகள் சீராக நடைபெறுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது என்பதைக் கூறிக்கொள்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. சு. ரவி அவர்கள்.*

திரு. சு. ரவி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஒருங்கிணைந்த குழந்தைகள் வளர்ச்சித் திட்டம் என்பது தமிழகத்திற்கு ஒரு முக்கியமான திட்டமாகும். குழந்தைகள் வளர்ச்சி என்பது நாட்டுக்கு முக்கியமான ஒன்றாகும். ஒருங்கிணைந்த குழந்தைகள் வளர்ச்சித் திட்ட அலுவலகமானது வட்டார அளவிலே நடைபெறுகின்ற அலுவலகம். தமிழகத்திலே பெரும்பாலான இடங்களில் வாடகைக் கட்டடங்களில் இவை இயங்கி வருகின்றன. சில அலுவலகங்கள் அரசுக் கட்டடங்களில் எந்தவித அடிப்படை வசதிகளும் இல்லாமல் இயங்கி வருகின்றன. ஆகவே, குழந்தைகள் வளர்ச்சித் திட்டம் என்பது ஒரு முக்கியமான திட்டம். குழந்தைகள் வளர்ச்சி என்பது முக்கியமான ஒன்றாகும். எனவே, தமிழகத்தில் வாடகைக் கட்டடங்களில் இருக்கக்கூடிய ஒருங்கிணைந்த குழந்தைகள் வளர்ச்சித் திட்ட அலுவலகங்களுக்குச் சொந்தக் கட்டடம் கட்ட இந்த அரசு முன்வருமா என்பதைத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு சமூக நலன்–மகளிர் உரிமைத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திருமதி பி. கீதா ஜீவன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வட்டார அளவிலுள்ள ஒருங்கிணைந்த குழந்தைகள் வளர்ச்சித் திட்ட அலுவ லகங்களுக்குச் சொந்தக் கட்டடம் கட்டிக் கொடுக்கப்படுமா என்று மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கேட்கிறார்கள். நிச்சயமாக, மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய கோரிக்கையை அரசு பரிசீலிக்கும். ஒவ்வோர் ஒன்றிய அலுவலகத்திலும் குழந்தைகள் வளர்ச்சித் திட்ட வட்டார அலுவலகத்திற்கு ஓர் இடம் கொடுக்க வேண்டுமென்று இத்துறை முயற்சி எடுத்து வருகிறது. தனியாக இருக்கும் அலுவலகக் கட்டடத்தையும் பராமரிக்க நடவடிக்கை எடுத்து வருகிறோம்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 57, மாண்புமிகு உறுப்பினர் திரு.* A.P. *நந்தகுமார், மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள்.*

57—

மின்மாற்றி

***38089—திரு. A.P. நந்தகுமார்:**

மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

அணைக்கட்டு தொகுதி, ஒடுகத்தூர் பேரூர், 3-வது வார்டு, பெரியார் நகரில் மின்மாற்றி அமைக்க அரசு ஆவன செய்யுமா?

மாண்புமிகு திரு. V. செந்தில்பாலாஜி, மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

அணைக்கட்டு தொகுதி, ஒடுகத்தூர் பேரூர், 3-வது வார்டு, பெரியார் நகரில் ஏற்கெனவே ஒடுகத்தூர் SS–I/*100 கே.வி.ஏ. மின்மாற்றியிலிருந்து சீரான மின்சாரம் வழங்கப்பட்டு வருகிறது என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.*